


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | மார்ச் 12, 2020 | புரட்சி 19 | முழக்கம் 09 | விலை: ரூ.3.00


## மாநிலங்களவையில் அதிர்ச்சித் தகவல்

# ‘அய்.அய்.டி’களில் ‘இடஒதுக்கீடு’ மறுப்பு

பார்ப்பனப் பிடியில் உள்ள அய்.அய்.டி. உயர் கல்வி நிறுவனங்களில் பட்டியல் இனப் பிரிவினருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும் இட ஒதுக்கீடுகள் முழுமையாக நிரப்பப்படுவது இல்லை என்ற புள்ளி விவரங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து 2019 வரை முனைவர் பட்டத்துக்கான தேர்வுத் திட்டங்களில் பட்டியலின பழங்குடிப் பிரிவு மாணவர்கள் மிக மோசமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். மாநிலங்களவையில் கடந்த வெள்ளிக் கிழமை (மார்ச் 6, 2020) அரசு சமர்ப்பித்த அறிக்கையில் இந்த விவரங்கள் அடங்கியுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் மொத்தமுள்ள 23 அய்.அய்.டி. நிறுவனங்களில் 25007 மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டனர். இதில் பட்டியல் இனப் பிரிவு மாணவர் 9.1 சதவீதம் மட்டுமே. பழங்குடிப் பிரிவினர் 2.1 சதவீதம் மட்டுமே. இரு பிரிவினருக்கும் சேர்த்து 22.5 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பாதியளவுகூட நிரப்பப்படவில்லை.

பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 சதவீதம் இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் ஒதுக்கப்பட்டிருப்பதோ 23.2 சதவீதம்தான் மொத்த முனைவர் பட்ட ஆய்வாளர்கள் படிப்புக்கான இடங்களில் 65.6 சதவீதம் பார்ப்பன உயர்ஜாதி மாணவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கேரளாவைச் சார்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எலமரம் கரீம் மற்றும் கே. சோமபிரசாத் ஆகியோர் எழுப்பிய கேள்விக்கு மத்திய மனித வளத் துறை அமைச்சகம் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விவரங்கள் அடங்கியுள்ளன. இத்தனைக்கும் முனைவர் பட்ட ஆய்வுக்கான இடங்கள் 20 சதவீதம் கூடுதலாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் பயன் ஒடுக்கப்பட்ட சமுதாய மாணவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

முனைவர் பட்டப் படிப்புகளில் 60 சதவீதம் சென்னை, பம்பாய், டெல்லி, கான்பூர் மற்றும் காரக்பூர் அய்.அய்.டி.களில் தான் உள்ளன. ஆனால் மிகவும் பிரபலமான இந்த நிறுவனங்களில்தான் தலித் மாணவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

உதாரணமாக கான்பூர் அய்.அய்.டி.யில் 1653 மாணவர்கள் முனைவர் பட்டப்படிப்புக்கு சேர்க்கப்பட்டார்கள். இதில் பழங்குடி மாணவர்கள் 11 பேர் மட்டுமே. இந்த முனைவர் ஆய்வுப் படிப்புக்கான இடங்கள் மற்ற எல்லா நிறுவனங்களையும்விட சென்னை அய்.அய்.டி.யில் தான் அதிகம். 3874 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் பட்டியல் பிரிவு மாணவர்கள் 6.4 சதவீதம் பேருக்கு மட்டுமே அனுமதி கிடைத்துள்ளது. முன்னணியிலுள்ள மேற்குறிப்பிட்ட 5 அய்.அய்.டி. நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு பூர்த்தி செய்யப்பட்டிருப்பது, சென்னை அய்.அய்.டி. ஒன்றில் மட்டும் தான்.

“மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவில்லை என்று நிர்வாகம் கூறுவது உண்மையல்ல. மேலும் பல தகவல்களை இது குறித்து அரசிடம் கேட்டுள்ளேன். அவைகள் கிடைத்த பிறகு நிர்வாகம் கூறுவது பொய் என்பதை அம்பலப்படுத்துவேன்” என்கிறார், கேள்வி கேட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சோமபிரசாத்.

அய்.அய்.டி.களில் சமூக நீதி பற்றி ஆய்வு செய்து வரும் பெங்களூரைச் சார்ந்த சித்தார்த் ஜோஷி போதுமான விண்ணப்பங்கள் வரவில்லை என்று கூறுவது உண்மைக்கு மாறானது. இடஒதுக்கீடுக்கான இடங்களை முழுமையாக நிரப்புவது நிர்வாகத்தின் சட்டப்பூர்வ கடமை என்று கூறுகிறார்.

பெரிய அய்.அய்.டி. நிறுவனங்களாக முன்னிலையில் உள்ள பம்பாய், கான்பூர், டெல்லி, சென்னை, காரக்பூர், அய்.அய்.டி.களில் மாணவர் சேர்க்கையிலேயே பார்ப்பனர் உயர்ஜாதி மாணவர்களே அதிக எண்ணிக்கையில் சேர்க்கப்படுகிறார்கள். பம்பாய் 71.3 சதவீதம்; கான்பூர் 68.8. சதவீதம்; டெல்லி 76.5 சதவீதம்; சென்னை 64.4 சதவிதம்; கோரக்பூர் 64.9 சதவீதம்.

இந்த நிலையில் உயர்ஜாதி ஏழைகளுக்கு 10 சதவீத ஒதுக்கீட்டை மோடி ஆட்சி கொண்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ●

## கடவுள் – மத மறுப்பாளராக 98 வயது வாழ்ந்து காட்டிய திராவிடர் இயக்கத்தின் மூத்த தலைவர் பேராசிரியர் அன்பழகன் விடைபெற்றார்



இனமானப் பேராசிரியர் அன்பழகன், தனது 98ஆவது அகவையில் மார்ச் 7, 2020 இல் முடிவெய்தினார். திராவிடர் இயக்கத் தூண்களில் ஒருவர். தமிழையும் சுயமரியாதைக் கொள்கைகளையும் தனது இரு கண்களாகப் போற்றியவர். மிகச் சிறந்த பேச்சாளர். மாணவப் பருவத்திலிருந்தே அவரது திராவிடர் இயக்கப் பயணம் தொடங்கி விட்டது. தி.மு.க.வின் பொதுச் செயலாளராக 43 ஆண்டுகாலம் இருந்து கலைஞரின் உற்ற துணைவராக செயல்பட்டவர். மிக மிக எளிமையானது அவரது வாழ்க்கை. 7 முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர். பெரியார் குறித்து ஆழமான அவரது உரைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. கடவுள் – ஜாதி – மதமற்ற வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர். ஒரு கடவுள் மறுப்பாளர் 98 வயது வரை வாழ முடியும் என்ற செய்தியையும் அவரது மரணம் உணர்த்தி நிற்கிறது. பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தினர். மதச் சடங்குகள் ஏதும் இன்றி திராவிடர் இயக்க அடையாளங்களோடு அவரது இறுதி நிகழ்வுகள் நடந்தன.

திராவிடர் விடுதலைக் கழகம் பேராசிரியருக்கு வீரவணக்கம் செலுத்துகிறது.

# சென்னையில், டெல்லி கலவரத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் இஸ்லாமியர்களுக்கு எதிரான கலவரத்தில் இதுவரை 53 பேர் கொல்லப்பட்டனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இஸ்லாமியர்களின் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன.

02.03.2020 அன்று மாலை 4:30 மணியளவில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில், உரிமைக்காகப் போராடிய மக்களைத் தாக்கியதைக் கண்டித்தும், மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், கலவரக்காரர்களைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நிகழ்வில், திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்த் தேச மக்கள் முன்னணி, மக்கள் அதிகாரம், மே 17 இயக்கம், மனிதநேய மக்கள் கட்சி, சிபிஐ(எம்.எல்) ரெட் ஸ்டார், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம், எஸ்டி.பி.அய், தமிழ்த் தேசியப் பேரியக்கம், பி.எஃப்.அய், மக்கள் அரசுக் கட்சி, மக்கள் சனநாயகக் குடியரசுக் கட்சி, தமிழர் விடியல் கட்சி, தமிழ்த் தேச மக்கள் கட்சி உள்ளிட்ட ஜனநாயக அமைப்புகள் கலந்து கொண்டன.

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு டெல்லி கலவரத்தின் பின்னணியையும், கலவரத்தைக் கண்டித்தும் கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில், தென் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், வட சென்னை




மாவட்டத் தலைவர் யேசுகுமார், தென் சென்னை மாவட்ட ஒருங்கிணைப் பாளர் சுகுமார் உள்ளிட்ட கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தை திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தமிழ்த் தேச மக்கள் முன்னணித் தோழர்கள் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்திருந்தனர்.

– நமது செய்தியாளர்

# பார்ப்பன உயர்ஜாதி அதிகார வர்க்கத்தின் கார்ப்பரேட் கொள்ளைக்கு மற்றொரு சான்று ‘எஸ்’ வங்கி ‘திவால்’

பார்ப்பன உயர்ஜாதி அதிகார வர்க்கத்தின் பிடியில் உள்ள வங்கிகள் கோடி கோடியாக கொள்ளையடிப்பதற்கும், தொழிலதிபர்களிடம் கமிஷன் பெற்றுக் கொண்டு கடன் வழங்குவதற்குமே பெரிதும் பயன்பட்டு வருகின்றன. பார்ப்பன ஆதிக்கத்திலுள்ள ‘அய்சி.அய்.சி.அய்.’ வங்கியின் நிர்வாக இயக்குனராக இருந்த ஒருவர் ஊழலில் சிக்கி இப்போது சி.பி.அய். விசாரணையில் நீதிமன்றத்துக்கு அலைந்து கொண்டிருக்கிறார். இப்போது ‘எஸ்’ என்ற தனியார் வங்கி திவாலாகியிருக்கிறது.

கடந்த 2014ஆம் ஆண்டு ரிசர்வ வங்கி கண்காணிப்பின் கீழ் உள்ள இந்தத் தனியார் வங்கி, கடனாக வழங்கிய தொகை ரூ.55,633 கோடி. இது மார்ச் 2019இல் ரூ.2,44,999 கோடியாக சுமார் 8 மடங்கு உயர்ந்தது. மத்தியில் ஆளும் பா.ஜ.க.வுக்கு நெருக்கமான கார்ப்பரேட் முதலாளிகளுக்கு மக்கள் சேமிப்பிலிருந்து இந்தத் தொகை கடனாக ‘தானம்’ செய்யப்பட்டு, பிறகு திருப்பித் தராமல் ‘பட்டை நாமம்’ சாத்தப்பட்டுள்ளது. 2014லிருந்து 2019ஆம் ஆண்டு வரை நடந்த பா.ஜ.க. ஆட்சியில் மேலிட செல்வாக்குடன் கடன் பெற்ற நிறுவனங்கள் அனைத்தும் மோசடி நிறுவனங்களாகும். ஏற்கனவே வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்தாத நிறுவனங்களான அனில் அம்பானியின் ரிலையன்ஸ் குழுமமும், பல்வேறு மோசடி புகார்களில் சிக்கியிருந்த திவான் வீட்டுக் கடன் வழங்கும் நிறுவனமும் (திவான் அவுசிங் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் - டி.எச்.எப்.எல்.), ‘அய்.எல். மற்றும் எஃப்.எஸ்.’ நிறுவனமும் கடன் பெற்ற நிறுவனங்களாகும். ஏற்கனவே மோசடி செய்த நிறுவனங்களுக்கு வங்கியின் நிறுவனர் ராணா கபூர் மீண்டும் கடன் வழங்கிய முறைகேடுகளை அறிந்த ‘ரிசர்வ் வங்கி’, அவருக்கு பதவி நீட்டிப்பு வழங்க மறுத்தது.

நியாயமாக ரிசர்வ் வங்கி இவர்களுக்கு பதவி நீட்டிப்பு வழங்க மறுத்ததற்கான காரணத்தை வெளியிட்டிருக்க வேண்டும். திருப்பித் தர முடியாத நிறுவனங்களுக்கு முறைகேடாக கடன் வழங்கப்பட்ட உண்மை வெளியே தெரிந்திருக்குமானால் வங்கியில் பணம் போட்டவர்கள் விழித்துக் கொண்டிருப்பார்கள். வங்கியை திவாலாகாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்திருக்க முடியும். ரிசர்வ் வங்கி மவுனமே சாதித்தது. கடைசியாக ரிசர்வ் வங்கி, தனது முடிவை மாற்றிக் கொண்டு ராணா கபூரின் பதவிக் காலத்தை ஜன.2019 வரை நீட்டித்து பதவியில் தொடர அனுமதித்தது. **முதலில் பதவி நீட்டிப்பை மறுத்த ரிசர்வ் வங்கி, மோசடிகளை நன்றாக தெரிந்த பிறகும் ஏன் தனது முடிவை மாற்றிக் கொண்டது என்பது விடை தெரியாத கேள்வி.**

‘டி.எச்.எஃப்.எல்.எஸ்’ மோசடி நிறுவனத்துக்கு கடன் வழங்கியதற்காக கபூர் ரூ.600 கோடி இலஞ்சம் பெற்றுள்ளார். இந்த நிறுவனம் பல்வேறு வங்கிகளில் ரூ.13,000 கோடி கடன் பெற்று, போலியான 79 நிறுவனங்களுக்கு அந்தப் பணத்தைக் கடனாகக் கொடுத்ததாகக் கூறி மோசடி செய்துள்ளது. இந்த நிறுவனம் வாங்கிய மொத்தக் கடனில், 4 ஆயிரத்து 450 கோடி ரூபாய் ராணா கபூரின் ‘எஸ்’ வங்கியில் பெற்றதாகும். இதற்கு கைம்மாறாக ராணா கபூரும், அவரது மகள்கள் இருவரும் இயக்குனராக உள்ள ‘டூயிட் அர்பன் வெஞ்சர்ஸ்’ எனப்படும் நிறுவனத்தில், ரூ.600 கோடி ரூபாய் (இலஞ்சமாக) முதலீடு செய்துள்ளதை அமுலாக்கத் துறை கண்டுபிடித்து, கபூரை கைது செய்துள்ளது. இலண்டனுக்கு தப்பி ஓட முயன்ற கபூரின் மகள் ரோஷினி, பம்பாய் விமான நிலையத்தில் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார். கடந்த 8 மாத காலத்தில் கபூர் மூன்று முறை இலண்டனுக்கு சென்று திரும்பியுள்ளார். பெரிய புள்ளிகளுடன் பேரங்கள் நடந்துள்ளன என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு கூறுகிறது. கபூர், அமெரிக்காவின் வங்கி ஒன்றில் உயர் பொறுப்பில் பணியாற்றி இந்தியா திரும்பியவர்.

**‘பூரி ஜெகநாதன்’ பணமும்’ திவால்?**

ஒரிசா மாநிலம் பூரியில் பிரபலமான ஜெகநாதன் கோயில் அறக்கட்டளைக்குச் சொந்தமான ரூ.546 கோடி ‘எஸ்’ வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. பணம் ‘பகவானுக்கு’ திரும்பி வருமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது. வாடிக்கையாளர்கள் இந்த வங்கியிலிருந்து ரூ.50,000/-க்கு மேல் எடுப்பதற்கு ரிசர்வ் வங்கி தடை விதித்தள்ளது. இதனால் வங்கியில் பணம் போட்டவர்கள் பதற்றத்தில் உள்ளனர். பூரி கோயிலின் தலைமை அர்ச்சகரான பினாய்க்தாஸ் மொகாபாத்ரா என்பவர் கோயிலுக்கு சொந்தமான இவ்வளவு பெரிய தொகையை தனியார் வங்கியில் போட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குற்றம் சாட்டுகிறார். ‘நிரந்தர சேமிப்புத் திட்டத்தில் தான் தற்காலிகமாக முதலீடு செய்யப்பட்டது. இம்மாத இறுதியில் சேமிப்பு காலம் முடிவடையும்போது தேசிய மய வங்கிக்கு மாற்றப்படும்” என்கிறார் ஒரிசா சட்ட அமைச்சர்.

பூரி ஜெகநாதன் கோயில் அரசு கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால் கோயில் பணம் மட்டும் அரசுடைமை வங்கியில் இருப்பதுதான் பாதுகாப்பு என்கிறார்கள் பார்ப்பன அர்ச்சகர்கள்.

# குனிந்து கிடந்தவனை நிமிர வைத்தது திராவிடர் இயக்கம்

*அரை நூற்றாண்டு திராவிடக் கட்சிகளின் ஆட்சி சாதனையாக எதைச் சொல்வீர்கள்?*


நான் வசித்த மயிலாடுதுறையில் மகாதேவ தெரு, பட்டமங்கலம் தெரு என்று இரண்டு தெருக்கள் உண்டு. பிராமணர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தெரு. அவர்கள்தான் வழக்கறிஞர்களாக, ஆசிரியர்களாக, மருத்துவர்களாக இருப்பார்கள். சாமானிய மக்கள் அன்றைக்கு அந்தத் தெருக்களில் நுழைந்தாலே, ‘சாமி வீட்டுக்குப் போகிறேன்’ என்று சொல்வார்கள். அய்யர் வீடு என்றுகூட சொல்ல மாட்டார்கள்.

‘எந்தச் சாமி வீட்டுக்குப் போகிறாய்?’ என்று கேட்டால், ‘டாக்டர் சாமி வீட்டுக்குப் போகிறேன்; வக்கீல் சாமி வீட்டுக்குப் போகிறேன்’ என்று பதில் வரும். அவ்வளவு பய பக்தி! பிள்ளைவாள் வரச் சொன்னார், முதலியார் வீடு வரை போய் வருகிறேன் இப்படி எல்லோருமே சாதியால்தான் குறிப்பிடப் பட்டார்கள். மேல்சாதி என்று சொல்லிக் கொள் பவர்களுக்கு இதில் உள்ள பேதம் புரியாது. ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களை எப்படி அழைத்திருப்பார்கள் என்று நினைத்துப் பாருங்கள். எனக்கு விவரம் தெரிந்து முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் வீடுகளில் தண்ணீர் குடிக்க யோசித்த இந்துக்கள் உண்டு. என்னுடைய அப்பாவின் நண்பர் ஒருவர் கோமுட்டிச் செட்டியார்.

அவர் நல்ல மனிதர். ஆனால், அவர் எங்கள் வீட்டுக்கு வந்தால், திண்ணையில்தான் உட்காருவாரே தவிர, வீட்டுக்குள் வர மாட்டார். அவரும் சைவர்; நாங்களும் சைவர்கள். ஆனால், அவரைச் சாப்பிடச் சொன்னால் சாப்பிட மாட்டார். “அரிசியைக் கொடுத்துவிடுங்கள். நானே பொங்கிக்கொள்கிறேன்” என்பார். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இன்றைக்குத் தமிழ்நாடு உள்ள நிலைமையை யோசித்துப் பாருங்கள். தமிழன் என்ற அடையாளத்தால் எல்லோரும் ஒன்றுபட்டிருக்கிறோமா, இல்லையா? அன்றைக்கெல்லாம் வெளி மாநிலங்களிலோ வெளிநாடுகளிலோ நம்மவர்களைப் பார்த்தீர்கள் என்றால், அவ்வளவு ஒடுங்கிப்போய் நிற்பார்கள்.

தமிழன் என்றாலே பிறவியிலேயே ஏதோ தாழ்ந்துவிட்டதாக எண்ணிய, இழிவாகக் கருதிய நாட்கள் எல்லாம் உண்டு. இன்றைக்கும் நாம் முழுக்க உயர்ந்து நிற்கிறோம் என்று சொல்ல மாட்டேன். ஆனால், நம் உடல் யார் முன்னாலும் குனிந்து நிற்கவில்லை அல்லவா? அதுதான் திராவிட இயக்கத்தின், திராவிடக் கட்சிகளினுடைய ஆட்சியின் பெரும் சாதனை என்று சொல்வேன்.

*நீங்கள் வெவ்வேறு துறையில் அமைச்சராக இடம்பெற்றிருந்த கருணாநிதி தலைமையிலான திமுக ஆட்சியின் மைய நோக்கமாக எதைச் சொல்வீர்கள்?*



திமுக ஆட்சி என்று சொல்லாமல் நம்முடைய ஆட்சி என்றே பெரியார் சொன்னார். “கருணாநிதி ஆட்சியில் 13 அமைச்சர்களில் 13 பேரும் தமிழர்கள். 18 உயர் நீதிமன்ற நீதிபதிகளில் 16 பேர் தமிழர்கள். அரசியலில் ஆளுங்கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் நூற்றுக்கு நூறு தமிழர்கள் உள்ளனர்” என்று பாராட்டினார் பெரியார்.

தொட்ட ஒவ்வொரு துறையிலும் மாற்றத்தை உருவாக்கியவர் கருணாநிதி. தொட்ட துறைகளில் எல்லாம் அதன் எல்லையைத் தொட்டவர். உற்ற நண்பனாகவும் உடனிருந்த நிதியமைச்சராகவும் ஆத்மார்த்தமாகச் சொல்கிறேன். ஏழைகளின் பார்வையிலிருந்து மக்களைப் பார்க்கிற தலைவர் அவர். மின் கட்டணம், பஸ் கட்டணம் ஏற்றுவதற்கெல்லாம் அவ்வளவு யோசிப்பார்.

பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்; அதேசமயம், பால் நுகர்வோருக்கு விலையை ஏற்றாமல் இருக்க என்ன வாய்ப்பு இருக்கிறது என்றெல்லாம் யோசிப்பார். மக்கள் மீது சுமையை ஏற்ற கலைஞர் ஒருபோதும் விரும்புவது இல்லை. இது எனக்கு ரொம்பவும் பிடித்த விஷயம். அப்புறம் எங்கள் இருவருக்குமான ஆதார சுருதி - தமிழ், தமிழர் நலன். அதுவே எங்களது இணைப்புச் சங்கிலி.

**‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ நூலுக்காக**
**பேராசிரியர் க. அன்பழகன் அளித்த பேட்டியிலிருந்து**

## அரசுப் பள்ளிகளில் பட்டியல் பிரிவு குழந்தைகளை கழிவறை சுத்தம் செய்ய பணிப்பதா? சட்ட நடவடிக்கை எடுக்க, கோவை மாநகர் கழகம் புகார்

கோவை மாநகர கலந்தாய்வு கூட்டம் 8.3.2020 காலை 11 மணியளவில் வ.உ.சி. பூங்கா அருகிலுள்ள சிறுவர் பூங்காவில் நடைபெற்றது. அதில்கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. தோழர் ஃபாரூக் நினைவு நாளை ஒட்டி 17.03.2020 அன்று அண்ணாமலை அரங்கில் கருத்தரங்கம் மற்றும் மறைந்த தோழர்கள் பேராசிரியர் அன்பழகன், ஆசிட் தியாகராஜன், இராவணன் ஆகியோரது படத்திறப்பு நடத்துவது.

2. 09.03.2020 திங்கள் கிழமை அன்று அரசு பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட குழந்தைகளை கழிவறைகளை அகற்ற வற்புறுத்தும் ஜாதிய தீண்டாமை கொடுமைகளுக்கு துறை ரீதியாக மட்டுமே நடவடிக்கை எடுப்பதைக் கண்டித்து ஆசிரியர்கள் ஜெயந்தி, குமரேஷ்வரி மீது தீண்டாமை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரிடம் காலை 10 மணிக்கு மனு அளிப்பது என முடிவு செய்யப்பட்டது .

இதில் தோழர்கள் செ. வெங்கடேசன், ச. மாதவன், ஆ.சுரேஷ், நா.வே. நிர்மல்குமார் ப.கிருட்டிணன் மா.நேருதாசு ஆகியோர் கலந்து கொண்டனர். கலந்துரையாடலின் முடிவின்படி 9.3.2020 திங்கள் அன்று கோவை மாவட்டத்தில் சில அரசு பள்ளிகளில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட குழந்தைகளை கழிப்பறையை சுத்தம் செய்ய வைக்கும் ஜாதிய தீண்டாமை கொடுமைக்கு துறை ரீதியாக மட்டுமே நடவடிக்கை எடுப்பதை கண்டித்து உடனடியாக சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் மனுவை அளித்தோம். அப்போது மாவட்ட ஆட்சியர் ராஜாமணி பாதிக்கப்பட்டவர் புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறினார். அப்போது தோழர்கள் இன்றைய இந்திய சமூக சூழலில் குறிப்பாக கிராமத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஜாதி ரீதியாக பாதிக்கப்படும் போது தொடர்ச்சியாக ஒவ்வொரு முறையும் புகார் அளிக்க வருவது என்பது நடைமுறை யதார்த்தத்தில் சாத்தியமில்லை. பாதிக்கப்பட்ட உடன் புகார் கொடுத்தார்கள் அதற்கு அந்தப் புகாரின் மீது இப்போது வரை சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை மற்றும் நீங்கள் எடுக்கும் துறைரீதியான நடவடிக்கை மீண்டும் மீண்டும் இந்த ஜாதிய தீண்டாமைக் கொடுமை பள்ளிகளில் தொடர்வதை ஆதரிப்பதாகவே தான் எங்களால் பார்க்க முடிகிறது என்று திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கருத்தை முன்வைத்தார்கள். நிகழ்வில் தோழர்கள் சூலூர் பன்னீர் செல்வம், நேரு தாஸ், நிர்மல்குமார், வெங்கட், கிருஷ்ணன், இயல் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 12.03.2020**

## சென்னை கருத்தரங்கில் வாலாஜா வல்லவன் பேச்சு

# ‘மநு’ சாஸ்திரமே இப்போதும் ஆட்சி செய்கிறது

*திருச்சி பெரியார் சரவணன் எழுதிய ’திராவிடர் விவசாய சங்கம்’ நூலின் திறனாய்வு கருத்தரங்கம் 01.03.2020 அன்று சென்னை தலைமைக் கழகத்தில் நடைபெற்றது. கருத்தரங்கில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி சென்னை மாவட்டப் பொறுப்பாளரும் பெரியாரிய ஆய்வாளருமான வாலாசா வல்லவன் நிகழ்த்திய உரை:*

திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கத்தை பெரியார் 1952இல் தொடங்கி இருக்கிறார்கள். அது குறித்த இந்த புத்தகம் திராவிடர் விவசாய தொழிலாளர் கழகத்தின் அமைப்பினுடைய நோக்கங்கள் பற்றி 1952இல் வெளிவந்தது. தற்போது 2016ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தினரால் மறுபதிப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்டுகள் ஏன் சங்கம் வைத்திருக்கின்றனர், நாம் ஏன் திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் வைத்திருக்கிறோம் என்பதைப் பற்றி பெரியார் சொல்கிறார். கம்யூனிஸ்ட் கட்சி அப்போது ஒன்று தான். இந்திய பொதுவுடைமைக் கட்சி. சோவியத்தி லிருந்து கட்டளை வந்தால் டெல்லி அதை ஏற்கும். இங்கிருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்றவாறு பார்ப்பனிய சூழ்ச்சியை எதிர்கொள்ளும் வகையில் இந்த மண்ணிற்கு உண்டான ஒரு கட்சி வேண்டும் என்பதை பெரியார் நன்றாக புரிந்திருந்தார். காரல் மார்க்ஸ் இந்தியாவைப் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறார்.

அதில் சொல்கிறார், “இந்தியாவில் இருக்கின்ற ஒவ்வொரு கிராமமும் சுயதேவை பூர்த்தி கிராமங்கள். அந்த ஊருக்கு தேவையானது அந்த ஊரிலே கிடைக்கும். ஏனென்றால் அப்போது தொழில் வளர்ச்சியடையவில்லை. மார்க்ஸ் இருந்த காலகட்டத்தில் இந்தியா விவசாய நாடாக இருந்தது. தச்சர், குயவர், வண்ணார், நாவிதர் போன்று ஒரே ஊரில் அனைவரும் இருப்பார்கள். எனவே மார்க்ஸ் சொல்கிறார், ‘ஒவ்வொரு கிராமமும் சுய தேவை பூர்த்தி கிராமங்களாக இருந்தன’ என்றார். ஆனால் மார்க்ஸ் ஒன்றைக் கூற தவறிவிட்டார். அவை ஒவ்வொன்றும் ஜாதியாகப் பிரிந்து இருந்தன. அவருடைய ஆராய்ச்சி சரியான ஆராய்ச்சி, ஆனால் இவை பாரம்பர்யமாக வரும் குலத்தொழில் என்பதை மார்க்ஸ் கணிக்கத் தவறிவிட்டார். மார்க்ஸ் இந்தியாவை நன்றாக புரிந்து வைத்திருந்தார். மனுநீதியைப் படித்திருக்கிறார். மனுநீதியை மேற்கோள் காட்டியே டாஸ் கேப்பிட்டல் தொகுதி 2இல் எழுதுகிறார். ‘இந்தியாவில் ஒரு பசு மாடு இறந்தால் கவலைப்படுகிறார்களே தவிர உழைக்கும் மனிதன் இறந்துவிட்டால் கண்டுகொள்ளவில்லை’ பசுவிற்கு கிடைக்கும் மரியாதை கூட இந்தியாவில் உழைக்கும் மனிதனுக்கு இல்லை என்று மார்க்ஸ் 1854 இல் எழுதியிருக்கிறார். பசுவை, குரங்கை வணங்குகிறார்கள் எனவே இந்தியாவில் ஒரு கலாச்சாரப் புரட்சி வராமல் இங்கு கம்யூனிசம் மலராது” என்று எழுதியிருக்கிறார்.

இந்தியாவில் என்ன சிக்கல் என்றால், தொடக்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தலைவர்களாக தொடக்க காலத்தில். வந்தவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள். நம்பூதிரி பாட், இவர் தனது சொத்தையெல்லாம் ஏழைகளுக்கு எழுதி வைத்தார் என்பது உண்மைதான். ஆனால் மார்க்ஸ் கொள்கை களுக்கு நேர் எதிராக கம்யூனிஸ்ட் கட்சியை நாடாளுமன்ற அரசியலுக்குள் கொண்டு சென்றதற்கு நம்பூதிரி பாட்டுக்கு முக்கியமான இடம் உண்டு. ‘இந்திய நாடாளுமன்றமும் கம்யூனிஸ்ட்களும்’ என்று நம்பூதிரி பாட் புத்தகம் எழுதியிருக்கிறார். நாடாளுமன்றம் சென்று புரட்சி செய்யலாம் என்று மார்க்ஸ் ஒருநாளும் சொல்லவில்லை. லெனினும் அப்படி சொல்லவில்லை. லெனினிடம் கேட் கிறார்கள், ‘டூமா’ (நாடாளுமன்றம்) மீது மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது, அதில் நாம் கலந்து கொண்டு எதாவது செய்யலாமா? என்று லெனினிடம் கேட்கிறார்கள். லெனின், ‘நாடாளுமன்றத்தை பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தலாம் ஆனால் அதை வைத்து மட்டுமே எதையும் சாதித்து விட முடியாது’ என்று கூறினார்.

இந்தியாவிலும் அதே நிலைமை தான். அதிகாரக் கட்டமைப்பு உள்ளது. சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்களை விட அதிகாரிகள் தான் நிர்வாகங்களை நடத்தி வந்தனர். இன்று வரை அப்படியொரு நிலைமை தான். அந்த அதிகாரிகள் பார்ப்பனர்களாகத்தான் இன்று வரை இருக்கிறார்கள். முதல் தர பணிகளில் 5 சதவீதம் வரைகூட ஆதி திராவிடர்கள் வரவில்லை. இடஒதுக்கீட்டினால் ஓரளவு அந்த பணிகளுக்கு ஆதி திராவிடர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதே போல் OBC யினரும் முதல் தர பணிகளில் 2 சதவீதம் தான் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன. எனவே அதிகார வர்க்கத்தின் பிடியில் தான் இந்தியா போன்ற ஒரு அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது.



**பெரியார் தொடங்கிய திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் ஜாதி - தீண்டாமை எதிர்ப்பையும் பேசியது**

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் பெரியார், பொது வாழ்க்கைக்கு வருகிறார். தொடக்க காலத்தில் பெரியாரிடம் பெரிய மண்டி இருந்தது. ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் பார்த்து, காங்கிரஸிற்கு 1000 ரூபாய் நன்கொடை அனுப்பிவிட்டு, காங்கிரசில் உறுப்பினரானார். மண்டியை அதன் பின் நடத்தவே யில்லை. அதன்பின் பொதுத் தொண்டராகவே முழு நேரமாக இறங்கிவிட்டார். இரயில் பயணங்களின் போதுகூட மூன்றாம் வகுப்பு பயணங்கள் தான். தற்போது கூட இரண்டாம் வகுப்பு தான் உள்ளது. அப்போது மூன்றாம் வகுப்பு வரை இருந்தது. அதில் தான் பயணம் செய்வார். பெரியார் இந்த சமூகத்தை நன்றாக புரிந்து வைத்திருந்தார். நாம் திராவிடர்கள். பார்ப்பனர்கள் (ஆரியர்கள்) ஒரு நாளும் உடல் உழைப்பு வேலைகளை செய்வதில்லை. மனு தர்மத்திலே அவ்வாறு கூறி இருக்கிறார்கள். பார்ப்பான், ஏர் ஓட்டுகிற நாடு குட்டிச் சுவராகிவிடும். ஏன் எந்த பார்ப்பானும் ஏர் ஓட்டுவதில்லை. உடலுழைப்பு செய்யக்கூடாது என்று மனுவில் எழுதி வைத்திருக்கிறார்கள். 2000 ஆண்டுகளாக மனுதர்மம் தான் இந்த நாட்டை வெளிப்படையாக ஆட்சி நடத்தியது. இதற்கு யாரும் மறுப்பு தெரிவிக்க முடியாது. பவுத்த ஆட்சிக்குப் பின் சேர, சோழ, பாண்டியர் யாராக இருந்தாலும் மனுவை வைத்து தான் ஆட்சி செய்தார்கள்.

வெள்ளைக்காரர்கள் வந்த பின்பு, நேரடியாக மனுவிற்கு பதிலாக, இந்து சாஸ்திரங்களில் இருப்பதை தொகுத்து இந்து லா என்று 1863 இல் முதன் முதலில் தொகுத்தார்கள். அதிலும் மனு இருக்கிறது. அனைத்து ஸ்மிருதிகளும் கலந்து ஒரு கோர்வையாக இந்து சட்டத்தில் இருக்கிறது. 1955 இல் இந்து சட்டம் மீண்டும் எழுதப்பட்டது. அதிலும் மனு இருக்கிறது. இன்றைக்கு வரைக்கும் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகாமல் தடுத்து வைத்திருப்பது மனு தான். இந்திய அரசியலமைப்பச் சட்டத்தில் மனு சட்டத்தைப் புகுத்தி ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அரசியலமைப்பில் நேரடியாக நால் வர்ணத்தைக் கூறவில்லை. ஆனால் இந்துக்கள் நான்கு பிரிவாக இருக்கின்றனர் என்று அரசியலமைப்புச் சட்டம் முகவுரையிலேயே எழுதியிருக்கிறார்கள். சட்டம் படிக்கும் அனைவரும் அதை படித்தாக வேண்டும். இன்னமும் பல தீர்ப்புகள் அதனடிப்படையில் கொடுக்கப்படுகின்றன. 1996இல் கூட கிருஷ்ணகிரி அருகில் சொத்து தகராறில் வன்னியர்கள் சூத்திரர்கள் என்று ஒரு தீர்ப்பு வழங்கப் பட்டதாக கொளத்தூர் மணி ஒரு திருமணத்தில் ஆதாரங்களுடன் விளக்கினார்.

எனவே இன்றைக்கு வரை நால் வர்ணங்கள் தான் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. எனவே அரசர்கள் மதத்தின் பெயரால் பார்ப்பனர்களுக்கு நிலங்களை எழுதி வைத்தார்கள். கோவில்களுக்கும் எழுதி வைத்தார்கள். இன்றைக்கும் தென் மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் மடங்களுக்கு சொந்தமானாதாக இருக்கின்றன. அரசாங்கம் அதை எடுக்க முடியாதவாறு சட்டத்தில் இருக்கிறது. காமராசர் ஆட்சியில் நில உச்சவரம்பு சட்டம் கொண்டு வந்து கோவில் சொத்துக்களை எடுக்கலாம் என்றார். ஆனால் அய்.ஏ.எஸ் அதிகாரி கூறினார், கோவில் சொத்துக்களை நாம் எடுக்க முடியாது அதற்கு நமக்கு அதிகாரமில்லை என்றார். எனவே சட்டப் பாதுகாப்பை அவர்கள் ஏற்படுத்தி வைத்துக் கொண்டார்கள். எனவே 1952 இல் திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கத்தை பெரியார் தொடங்கிய போது, 1952க்கு முன் வரை இது வெறும் கூலிப் போராட்டமாக இருந்தது. நமது நெருக்கடியின் காரணமாகத் தான் இராஜாஜி 28.03.1952இல் பண்ணையாள் பாதுகாப்புச் சட்ட மசோதாவை கொண்டு வந்து அறிமுகப்படுத்தினார்.

இந்தச் சட்டம் என்ன சொல்கிறதென்றால், ஆறு ஏக்கர் அல்லது அதற்கு மேல் நிலம் வைத்திருப்பவர் களிடம் பண்ணைக் கூலிகளாக இருப்பவர்களை எந்த காரணத்தைக் கொண்டும் பண்ணைகளை விட்டு வெளியேற்றக் கூடாது. ஒரு வேலை வெளியேற்ற விரும்பினால் 150 ரூபாய் அதாவது ஆறு மாத கால ஊதியத்தை கொடுத்து வெளியேற்றலாம் என்று அந்த சட்டம் கூறுகிறது. பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் தொழிலாளர்களின் உடனடி வேலை நீக்கத்திலிருந்து பாதுகாத்தது என்ற முறையில் வரவேற்க வேண்டியதே. பெரியாரும் அந்தப் பார்வையில் வரவேற்றார். ஆனாலும் அதுவே முழுமையான பாதுகாப்பு இல்லை.

1952 இல் அண்ணல் அம்பேத்கர் Schedule Caste Federation தொடங்குகிறார். அந்த Federation-க்கு தலைவராக இருந்தவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த என். சிவராஜ், அதற்கு பொதுச் செயலாளராக இருந்தவர் தான் ராஜ் போஜ். நாடாளுமன்ற உறுப்பினரான அவர் 1954இல் பெரியார் தொடங்கிய திராவிடர் விவசாய தொழிலாளர் சங்க மாநாட்டைத் தொடங்கி வைத்து நாகப்பட்டிணத்தில் பேசினார். முதலில் அம்பேத்கரைத் தான் அழைக்கிறார்கள், ஆனால் அவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வரவில்லை. ராஜ்போஜ் பேசிய பேச்சும், அந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கிய பெரியாரின் பேச்சும் விடுதலை ஏட்டில் வந்துள்ளது. ராஜ்போஜ்,’ ஆதி திராவிடர் மக்களுக்கு திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் தான் சரியானது. நீங்கள் கம்யூனிஸ்ட் சங்கத்தில் இருக்காதீர்கள், இந்த திராவிடர் என்ற பெயரே சிறப்பான பெயர். இந்த சங்கம்தான் ஜாதியை ஒழிக்கக்கூடியது, சமத்துவத்தை தரக்கூடியது, நிலப் பகிர்வை, வாழ்விற்கான உத்திரவாதத்தை கொடுக்கக்கூடியது. ஆகவே இந்த சங்கத்தில் இணையுங்கள் என்று அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்துவிட்டுப் பேசுகிறார். இந்த மாநாட்டில் பெரியார் 12 தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்.

அதில் முக்கியமான ஒன்றிரண்டு தீர்மானங்களை இங்கு கூறுகிறேன். 1) தஞ்சை ஜில்லா பன்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கவும், அதன் மீது நடவடிக்கை எடுக்கவும் ஆர்.வி.கோபால், ஆர்.வி.சிங்கம், இராசய்யா, ஏ.என் ஜோசப், நவநீதம் ஆகியோரைக் கொண்ட கமிட்டி அமைத்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்படுகிறது. இவர்கள் நமது விவசாய சங்கத்தைச் சார்ந்தவர்களே. 2) இந்த மாகாணத்திலுள்ள கோவில்கள், மடங்கள் பேரிலுள்ள ஆயிரக்கணக்கிலுள்ள நன்செய் நிலங்களை அனைவருக்கும் உழுது பயிரிடும் அளவிற்கு இனாமாக வழங்குமாறு இம்மாநாடு சர்க்காரை கேட்டுக் கொள்கிறது. 3) புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு பிரித்து கொடுக்குமாறு இம்மாநாடு சர்க்காரை கேட்டுக் கொள்கிறது. 4) பெரிய நிலச் சுவாந்தார்களிடம் உள்ள ஆயிரக்கணக்கான நிலங்களை ‘எவ்வித நஷ்ட ஈடு’ இல்லாமல் சர்க்கார் எடுத்துக் கொண்டு இந்நாட்டிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு அவரவர் பயிர் செய்யும் வசதிக்கு ஏற்ப பிரித்துக் கொடுக்குமாறு இம்மாநாடு தீர்மானிக்கிறது.

மார்க்சியத்தில், ஏங்கெல்ஸ் எழுதிய இரண்டு நூல். மிகச் சிறப்பான நூல். அரசு, குடும்பம், தனிச் சொத்து ஆகியவற்றைப் பற்றிய நூல். அடுத்த நூல் கூலி, விலை, லாபம் அந்த நூலில் ஏங்கெல்ஸ் சொல்கிறார், தொழி லாளர்களுக்கு மார்க்சியம் பயிற்றுவிக்கவேண்டியது என்னவென்றால் கூலி கொடு என்பதல்ல, நீ யார் எனக்கு கூலி கொடுப்பதற்கு உன்னிடம் குவிந்துள்ள சொத்துக்கள் எங்களால் வந்தவை, எங்களுடைய முன்னோர்களை ஏமாற்றி சேர்த்தாய் தற்போது எங்களுடைய உழைப்பு தானே உபரி இலாபமாக உன்னிடம் சொத்தாக உள்ளது. எனவே நஷ்ட ஈடு கொடுக்காமல் தொழிலாளர்களுக்கு சொத்துக்களை கொடுக்க வேண்டும் என்று ஏங்கெல்ஸ் எழுதுகிறார். பெரியார் அதை இந்த மாநாட்டில் தீர்மானமாகக் கொண்டு வந்துள்ளார். பண்ணையார்களுடைய நிலங்களை எந்தவித இழப்பீடும் இல்லாமல் விவசாயி களுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று இது தான் அடிப்படை மார்க்சியம். ஆனால் இங்கிருக் கின்ற தொழிற்சங்கங்கள் என்ன செய்கிறார் களென்றால், போனஸ் கொடு, விலைவாசிக்கு ஏற்றவாறு கூலியை உயர்த்திக் கொடு என்று கேட்கிறார்கள்.

**(தொடரும்)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## கழக ஏடுகளுக்கு சந்தா : கழகப் பொறுப்பாளர்கள் நேரில் வருகிறார்கள்

பெரியார் முழக்கம் மற்றும் நிமிர்வோம் சந்தாக்களைப் பெறுவதற்காக தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள், அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் தோழர்களைச் சந்திக்க நேரில் வருகிறார்கள்.

20.03.2020 - வெள்ளிக்கிழமை காலை. 10 மணிக்கு - திருச்சி, பெரம்பலூர் மாவட்டம்.

மாலை 5 மணிக்கு தஞ்சை மாவட்டம்.

21.03.2020 - சனிக்கிழமை காலை 10மணிக்கு - நாகை மாவட்டம், மயிலாடுதுறை.

மாலை 5 மணிக்கு கடலூர் மாவட்டம்.

22.03.2020 - ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு - விழுப்புரம், கள்ளக்குறிச்சி.

மாலை 5 மணிக்கு ஆத்தூர்.

மேற்குறிப்பிட்ட மாவட்ட கழகத் தோழர்கள் இதற்கான ஏற்பாடுகள் செய்து சந்தாக்களை விரைந்து முடித்து கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## பெரியார் தொண்டர் ஆசிட் தியாகராசன் படத்திறப்பு



பெரியார் தொண்டர் ஆசிட் தியாகராசன் நினைவேந்தல் தலைமை கழக அலுவலகத்தில் 04.03.2020 அன்று மாலை 6:30 மணியளவில் தொடங்கியது. தென் சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுகுமார் வரவேற்புரையாற்றினார். தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் தலைமையில் நிகழ்வு நடந்தது. வட சென்னை மாவட்டத் தலைவர் யேசுகுமார் முன்னிலை வகித்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி படத்தைத் திறந்து வைத்தார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். நிகழ்வை தென் சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி தொகுத்து வழங்கினார்.

**சூலூரில் :** 01.03.2020 அன்று சூலூர் அறிவியல் பூங்காவில் (எஸ். ஆர். எஸ்.மண்டபம்) ஆசிட் தியாகராசன் படத்திறப்பு நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மறைந்த தோழர் ஆசிட் தியாகராசன் படத்தை திறந்து வைத்து அவரின் களப்பணிகளை நினைவு கூர்ந்து உரையாற்றினார். தொடர்ந்து கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமைப்புச்செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர்கள் மடத்துக்குளம் மோகன், சூலூர் பன்னீர் செல்வம், மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர் வெள்ளியங்கிரி, மாநகரத் தலைவர் நேருதாஸ், மாநகரச் செயலாளர் நிர்மல்குமார், மாவட்டப் பொருளாளர் உக்கடம் கிருஷ்ணன், மாணவர்கள் கழகப் பொறுப்பாளர்கள் வைத்தீஸ்வரி, சபரிகிரி, ஆனைமலை ஒன்றியச் செயலாளர் அரிதாஸ், சூலூர் ஒன்றியச் செயலாளர் சூலூர் பாபு, சூலூர் நகர அமைப்பாளர் முனியப்பன் மற்றும் நகர ஒன்றிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

## பேராசிரியர் அறிவரசன் முடிவெய்தினார்



தென்காசி - கடையம் நகர் இல்லத்தில் பேராசிரியர் அறிவரசன் 4.3.2020 அன்று இரவு 7.00 மணியளவில் முடிவெய்தினார். ஆழ்வார் குறிச்சிக் கலை அறிவியல் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி 1996இல் ஓய்வு பெற்றவர். இயற்பெயர் குமாரசாமி.

அண்ணாமலை பல்கலைக்கழகம் உருவாக்கிய தமிழ்க்காப்புப் போர்வாள்களில் ஒருவர். அங்குத் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்த மு. அருணாசலம், இவரின் பெரியப்பா.

ஈழத்தில் வாழ்ந்த நினைவுகளை ‘ஈழத்தில் வாழ்ந்தேன் இரண்டாண்டுகள்’ எனும் நூலாக எழுதியுள்ளார். நூலைச் சென்னை தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. மீனாட்சிபுரம் மதமாற்றத்தை ‘விடுதலைபுரம்’ என்னும் காப்பியமாகப் பாடியுள்ளார்.

மதமா? மனிதமா?, யார் இந்த இராமன்?, திராவிடர் இயக்க வரலாறு, சோதிடப் புரட்டு - முதலிய நூல்களின் ஆசிரியரான இவர் பெரியார், அம்பேத்கர் சிந்தனைகளில் உறுதி காட்டியவர்.

‘விடுதலை’, ‘உண்மை’ இதழ்களின் துணையாசிரியராக முன்பு பணியாற்றியவர். ‘மக்கள் தாயகம்’ எனும் மாத இதழைக் கடையத்திலிருந்து தொடர்ந்து நடத்தி வந்தார். கடையம் திருவள்ளுவர் கழகத்தை நிறுவிச் செயல்பட்டு வந்த இவர், அதன் வெள்ளிவிழாவை அண்மையில் சிறப்புற நடத்தியதோடு, அரிய மலர் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

ஈழத்தில் கிளிநொச்சியை தலைநகரமாகக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள், திறனுள்ள ஆட்சி நிர்வாகம் நடத்தியபோது விடுதலைப் புலிகளுக்கு தமிழ் உரை நடை - இலக்கணப் பயிற்சிகளை அளிக்க மேதகு பிரபாகரன் அழைப்பையேற்று பல மாதங்கள் கிளி நொச்சியில் தங்கி போராளிகளுக்கு பயிற்சி அளித்த பெருமை அவருக்கு உண்டு.

பிரான்சு, ஆத்திரேலியா, கனடா, சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளுக்கு ஆண்டுதோறும் சென்று, ஈழ இளையோருக்குத் தமிழ் பயிற்றுவிக்கும் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்.

இவரது துணைவியார் ஞானத்தாய் , திருச்சி பெரியார் நாகம்மை ஆதரவற்றோர் காப்பகப் பொறுப்பாளராகப் பல்லாண்டு பணியாற்றியவர்.

முத்துச்செல்வி, தமிழ்ச்செல்வி, செல்வநம்பி, அழகியநம்பி இவரின் மக்கள்.

பேராசிரியர் மு.செ. அறிவரசனார் பெயர், தமிழின எழுச்சி வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும். திராவிடர் விடுதலைக் கழகம் தனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

5.3.2020 அன்று அவர் உடல் , நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அவரது விருப்பப்படி இறுதி வணக்கத்துடன் ஒப்படைக்கப்பட்டது.

## சங்க தொழிலாளர்களுக்கான நலவாரிய அட்டை வழங்கும் விழா



கோவை மாவட்ட கலைக்கூடத்தில் நடந்த கட்டிட தொழிலாளர் சங்கம் நடத்திய சங்க தொழிலாளர்களுக்கான நலவாரிய அட்டை வழங்கும் விழாவில், கழகத்தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு நலவாரிய அட்டைகள் வழங்கியதுடன் சிறப்புரையாற்றினார். மேலும், பாவேந்தர் பாரதிதாசன் பேரவை. புலவர் செந்தலை கவுதமன் மற்றும் சூலூர் பன்னீர்செல்வம், சூலூர் பாபு, வழக்கறிஞர் சரவணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 12th March 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN